**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.155/2025**

**வழக்கு சாட்சி PW.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காவியா | தொழில் | : யூனியன் பேங்க் ஆப் இந்தியா கிளை மேலாளர் |
| தகப்பனார் பெயர் | : ரவி | கணவர் பெயர் | : ரெங்கசாமி |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 27 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுக்கா, ஒட்டன்சத்திரம் டவுனில் இருக்கும் முன்பு கார்ப்பரேசன் பேங்க், தற்போது யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஒட்டன்சத்திரம் கிளையில் கிளை மேலாளராக பணிபுரியும் ரெங்கசாமி அவர்கள் மனைவி சுமார் 27 வயதுள்ள காவியா ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் மேலாளர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 04.03.2020 | இந்திய அரசால் வங்கி இணைப்பு குறித்து வெளியிட்ட அரசிதழ் – கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.1 |
| 02 | 30.03.2016 | பிரதிவாதிகள் நிறைவேற்றிக் கொடுத்துள்ள கடன் விண்ணப்பம் – அசல் | வா.சா.ஆ.2 |
| 03 | 30.04.2016, 24.05.2016 | வாதி வங்கி, பிரதிவாதிக்கு அளித்த கடன் அனுமதிக் கடிதம் – அசல் | வா.சா.ஆ.3 |
| 04 | 24.05.2016 | ரூ.17,10,000/–க்கு பிரதிவாதிகள் வாதிக்கு நிறைவேற்றிக்கொடுத்துள்ள கடன் பத்திரம் – அசல் | வா.சா.ஆ.4 |
| 05 | 20.07.2018 | 1–ம் பிரதிவாதி நிறைவேற்றிக் கொடுத்துள்ள கடிதம் – அசல் | வா.சா.ஆ.5 |
| 06 | 24.04.2019 | 1–ம் பிரதிவாதி நிறைவேற்றிக் கொடுத்துள்ள கடன் உயிர்ப்பு கடிதம் – அசல் | வா.சா.ஆ.6 |
| 07 | 22.01.2020 | வாதி வங்கி வழக்குரைஞர் வழியாக பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட பதிவு அறிவிப்பு – அசல் | வா.சா.ஆ.7 |
| 08 | 23.01.2020 | அஞ்சலக ரசீதுகள் (2 எண்ணிக்கைகள்) | வா.சா.ஆ.8 |
| 09 | --- | பிரதிவாதிகளால் திருப்பப்பட்ட பதிவு அறிவிப்பு கவர் – அசல் | வா.சா.ஆ.9 |
| 10 | --- | தாவா கடன் கணக்கு சம்மந்தப்பட்ட கணக்கு பட்டியல் – உண்மை நகல் | வா.சா.ஆ.10 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.10.13 18:02:12 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்